# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.146/2023

2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வசந்தி | வயது | : | |
| க/பெ | : | மதியழகன் | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. நான் தான் போலீசில் புகார் கொடுத்தேன். விபத்து சமயத்தில் என் கணவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். அந்த வாகனம் எங்களுடையது தான். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். என் கணவர் தலையில் அடிப்பட்டு இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் மகன்களுக்கு திருமணம் ஆகவில்லை. அஜித்குமாருக்கு 23 வயது. பூவரசனுக்கு 20வயது. அவர்களை தவிர வேறு வாரிசுகள்இல்லை. என் கணவர் பால்மாடு வைத்து சம்பாதித்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து தார் சாலையில் நடந்தது என்றால் சரியல்ல. இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. என் கணவர் மீது தான் தவறு என்று இறுதி அறிக்கை முடிக்கப்பட்டுள்ளதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும், என் மகன்களும் சுயமாக சம்பாதிப்பதால் என் கணவரின் வருமானத்தை நம்பி நாங்கள் இல்லை என்றால் சரியல்ல. இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக என் கணவரின் வயதை குறைவாக காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் கிடைக்கத்தக்கவை அல்ல என்றாலும் சரியல்ல. தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.